1995 நவம்பர் 9]

வினா எண் 78, திரு. பெ. பொன்னுசாமி மற்றும் திரு. கே.ஏ. மனோகரன், இருவரும் இருக்கையில் இல்லை.

வினா எண் 79, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

79—

வாழக்கோம்பையில் லேம்ப் சொசைட்டியின் கிளை துவக்குதல்

***22533**—திரு. கே. கந்தசாமி:*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பச்சைமலை லேம்ப் சொசைட்டியின் கிளை ஒன்றை வாழக்கோம்பையில் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பச்சைமலை லேம்ப் கூட்டுறவு சங்கத்தின் கிளை ஒன்று வாழக்கோம்பையில் துவக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைமலையில் இருக்கின்ற லேம்ப் சொசைட்டியானது வாழக்கோம்பையில் இருந்து 35 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. வாழக்கோம்பையில் வசிக்கின்ற பெரும்பான்மையான மக்கள் மலைவாழ் மக்கள் ஆவார்கள். இவர்கள் 35 கிலோ மீட்டர் தூரம் சென்று தங்களுக்குத் தேவையான பொருட்களையும், நகைக் கடன்களையும் பெற முடியவில்லை. எனவே, அரசு பரிசீலித்து வாழக்கோம்பையில் பச்சைமலை லேம்ப் சொசைட்டியின் கிளை ஒன்றைத் துவக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பச்சைமலை லேம்ப் கூட்டுறவுச் சங்க விவகார எல்லையான வேப்படி, பாலக்காடு, வளசகல்பட்டு, சின்னகரட்டூர், பெரியகரட்டூர், நரிப்பாடி, மன்மலை, பாலக்காடு, கெங்ககட்டு, வாழக்கோம்பை, புதுமாவாறு ஆகிய இடங்களில் சுமார் 1,500 உறுப்பினர்கள் வசித்து வருகிறார்கள். இக்கிராமங்களின் மையப்

பகுதியில் அமைந்துள்ளதும், மேற்படி பகுதியில் ஊராட்சி ஒன்றியத்தைத் தலைமையிடமாகக் கொண்ட கெங்கவல்லி என்ற ஊரில் ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளரின் அனுமதி பெற்று இச்சங்கக் கிளை ஒன்று 1-3-1995 முதல் செயல்பட்டு வருகிறது. வாழக்கோம்பை பகுதியைச் சேர்ந்தவர்கள் சுமார் 100 பேர் மட்டுமே பச்சைமலை லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளனர். வாழக்கோம்பை என்ற கிராமத்தில் தம்பம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் நியாய விலைக் கடை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாழக்கோம்பையில் கிளை துவக்குவதற்கு 100 உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். வாழக்கோம்பையில் இருக்கின்ற மலைவாழ் மக்கள் அதிக அளவிலே உறுப்பினராகச் சேர்வதற்கு முன் வருகின்றார்கள். ஆனால் பச்சைமலை லேம்ப் சொசைட்டியினர் அவர்களை உறுப்பினராகச் சேர்க்க மறுக்கிறார்கள். எனவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து வாழக்கோம்பையில் பச்சைமலை லேம்ப் சொசைட்டியின் கிளை ஒன்றைத் துவக்குவதற்கு, மலைவாழ் மக்கள் நலன்களை முன்னிட்டுத் துவக்குவதற்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வாழக்கோம்பை பகுதியைச் சேர்ந்த 100 அங்கத்தினர்கள் நலன்களைக் கருதி வாழக்கோம்பையில் சங்கக் கிளை துவங்க வேண்டுமென்றால், கிளை மேலாளர், எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் ஆகிய பணியிடங்கள் அவசியம். மேற்படி பணியாளர்கள் செலவினம் மற்று சங்கத்தின் இதர செலவினங்களைச் சங்கக் கிளையில் எதிர்பார்க்கப்படும் நிதிவசதி மூலம் ஈடு செய்ய இயலாது.

முற்பகல் 11-05

எனவே, பச்சைமலை மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றினை வாழக்கோம்பையில் துவக்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.